
Koviloor Digital Library

நூல்

ஞானாங்குசம்



Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளால் அனுக்ரஹிக்கப்பட்ட மங்கள ஸ்ரீமுகம்.

ஆசார்ய சரணம்.

சாரீரக சாஸ்த்ரம் என்பது ஆசார்ய பாஷ்யத்துடன் கூடிய ப்ரம்ம ஸூத்ரங்களைக் குறிக்கும். விஸ்தாரமான அந்த சாஸ்த்திரத்தை ஸங்கிரஹமாக — அதாவது — ஸங்க்ஷேபமாக சுலோக ரூபமாக அருளியது ஸங்க்ஷேப சாரீரகாசாரியாள் என்று பெயர்பெற்ற ஸர்வக்ஞாத்ம ஸ்ரீ சரணாள். ஸன்யாஸிகள் வ்யாஸ பூஜை செய்யுங் காலத்தில் வ்யாஸ பூஜா மண்டலத்தில் இந்த ஸங்க்ஷேபா சாரியர்களுக்கும் ஒரு ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு அன்று இவர்களுக்கும் ஆவாஹன பூர்வகமாக பூஜை நடந்து வருகிறது. அவர்களெழுதிய நூலுக்கு ஸங்க்ஷேபக சாரீரகம் என்று பெயர். அந்நூலின் துவக்கத்தில் அந்நூலாசிரியர் ஆதி பகவத்பாதர்களை ஒரு சுலோகத்தால் நமஸ்கரித்திருக்கிறார். அந்த சுலோகத்தில் இருக்கும் பதங்களுக்குள் "अर्चितांघ्रि" (அர்சிதாங்க்ரி) என்ற ஒரு பதம் ஆசார்ய சரண பக்தர்களுக்கு அமிருதத்தைப் பொழிவதாகயிருக்கிறது.

சுலோகம் பின்வருமாறு:—

वक्तारमासाद्य यमेव नित्या।
सरस्वती स्वार्थसमन्विताऽभूत् ।
निरस्तदुस्तर्ककलङ्कपङ्का
नमामितं शङ्करमर्चिताङ्घ्रिम् ॥

[வக்தாரம்-ஆஸாத்ய-யம்-ஏவ-நித்யா-
ஸரஸ்வதீ-ஸ்வார்த்த-ஸமன்விதா அபூத்]
நிரஸ்த-துஸ்தர்க-களங்க-பங்கா
-நமாமி-தம்-சங்கரம்-அர்சித-அங்க்ரிம்]

ஸரஸ்வதி என்ற யோக பட்டம் ஸ்மார்த்த ஸன்யாஸக்ரமத்தில் உள்ள பத்து யோக பட்டங்களில் ஒன்று. தீர்த்தம், ஆச்ரமம், வனம், அரண்யம், கிரி, பர்வதம், ஸாகரம், ஸரஸ்வதி, பாரதி, புரி என்றும் இப்பத்து யோக பட்டங்களுக்கும் இன்ன காரணத்தைக்கொண்டு இன்ன யோக பட்டம் துரீயாச்ரமிகளுக்கு வழங்கப்பட்டது என்று ஸன்யாஸாஶ்ரம நூல்களில் தனித்தனியாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ப்ரக்ருத ஸங்க்ஷேப சாரீரக சுலோகம் ஸரஸ்வதி என்றும் பட்டத்தைத்தான் விவரிக்கிறதோ என்று தோன்றுகிறது.

நித்யா ஸரஸ்வதி யென்றால் வேதம் என்று பொருள். வேதம் ஆசார்யாளை அடைந்ததால்தான் தனது அர்த்தத்தோடு கூடியதாயிற்று. (வேரிடங்களை அடைந்த பொழுது அவ்வேதம் அனர்த்தமாக உபயோகப்பட்டது.) ஸரஸ்வதி உத்தமமான புண்ய நதி. அது ஆதி ஆசார்ய சுவாமிகளை காணும் வரையில் மந்தமாக ஓடிக்கொண்டிருந்தது. மந்தமாக ஓடும்பொழுது சேறுபடிந்து விடுகிறது. தனக்கு தன் உண்மைப் பொருளைக் கொடுக்கும் ஆசார்யாளை கண்ட மாத்திரத்தினால் ஆவல் மிகுந்து வெகுவேகமாக பிரவஹிக்க ஆரம்பித்தது. வேகம் அதிகரித்தவுடன் குதர்க்கம் என்னும் சேறு இருந்த இடம் தெரியாமல் அடித்துக்கொண்டு போகப்பட்டது. இதுபற்றியே "निरस्तदुस्तर्ककलङ्कपङ्का" (நிரஸ்த துஸ்தர்க கலங்கபங்கா) "எனத் திருவாய் மலர்ந்தருளினார் ஸங்க்ஷேபகாசாரியாள். அவ்வித ஆசார்ய மூர்த்தியை நான் நமஸ்கரிக்கிறேன். அவ்வாசாரிய சரணம் "अर्चिताङ्घ्रि (அர்சிதாங்க்ரி)" அதாவது எல்லோரும் பூஜிக்கும் சரணம். ஒவ்வொரு மனிதனுடைய பாதமும் யாராவது ஒருவரால் பூஜிக்கப்பட்டுத்தான் இருக்கும். ஆகையால் "அர்சிதாங்க்ரி" என்று விசேஷமாய் சொல்லப்படவேண்டுமானால் எல்லோராலும் பூஜிக்கப்பட்டதாகவே இருக்கவேண்

Koviloor Digital Library

டும். நிருபபதமாக "அர்சிதாங்க்ரி" இருக்க வேண்டுமானல் அது ஆசார்ய சரணமாகத் தான் இருக்கவேண்டும்.

நமது இந்தியா தேசத்திற்கு கிழக்குக் கோடியில் பர்மாதேசம் இருக்கிறது. அதையும் தாண்டி கிழக்கே போனல் இந்தோசைன என்று சொல்லப்படும் சில நாடுகள் இருக்கின்றன. அவைகளில் காம்போடியா, சயாம், அன்னம் முதலிய அடங்கியிருக்கின்றன. அதற்கு 'வியட்நாம்' என்று பெயர் வைத்திருக்கிருர்கள். இதி லடங்கிய சில பிரதேசங்களுக்கு "காம்போஜம்" என்பது பழைய பெயர். அந் நாட்டில் பழய ஜீர்ணமான சிவாலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் எங்கு பார்த்தாலும் சிதறிக் கிடக்கின்றன. ஒவ்வொரு ஆலயத் திலும் தேவ பாஷையான ஸம்ஸ்கிருதத் தில் பதிக்கப் பெற்ற கல்வெட்டுகள் எண் ணிறந்தவை. அக்கல்வெட்டுகளில் காணப் படும் ஸ்லோகங்களின் ரஸபாவத்திற்கு ஈடாக உள்ள கல்வெட்டு ஸ்லோகங்கள் நம் இந்தியாவில் இது வரையில் காணப் படவில்லை. அதில் ஒரு கல்வெட்டு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளிடம் சாஸ்திரம் படித்த ஒரு மஹானைக் குறித்து வரையப் பட்டிருக்கிறது. அது பின்வருமாறு.

येनाधीतानि शास्त्राणि भगवच्छङ्कराह्वयात् ।
निश्शेषसूरिमूर्द्धालिमालालीढांघ्रिपंकजात् ॥

இந்த சுலோகமானது ப்ரஞ்சு கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களுடைய சகாயத்தால் நமக்குக் கிடைத்த ஒரு பெரிய நிதி. இந்த சுலோகத்தில் பிற்பாதியான "निश्शेषसूरि-मूर्द्धालिमालालीढांघ्रिपंकजात्" என்றும் தொடரே சங்க்ஷேபக சாரீரகத்திலுள்ள अर्चिताघ्रिम् (அர்ச்சிதாங்க்ரிம்) என்னும் பதத்தில் உள்ளே அடங்கிக் கிடக்கும் பொருளை நமக்குத் தந்தது.

கற்றறிந்த பெரியோர்களில் ஆசார்ய சரணபங்கஜமகரந்தத்தில் லயிக்காதவர் யாரும் பாக்கி இல்லை. இவ்வித மஹிமை பொருந்தியது, ஆசார்ய சரணமொன்றே.

ஞானங்குசம்

[முகவுரை]

உலகில் சுகம் துக்கம் இரண்டும் சமமாயிருக்கிறது. ஆராய்ந்து பார்த்தால் துக்கமே அதிகம், சுகம் குறைவென்று தோன்றுகிறது. தேவலோகத்திலும் அஸுரர்களுடன் சண்டையும், பொருமையும் மலிந்துகிடக்கிறது. இவ்விடமும்பணமில்லாவிடில் தரித்ரனயிருக்கும் துக்கம் பணமிருந்தால் சோரபயம், சத்ருபயம், ஸமமாயிருப்பவர்களிடம் பொருமை, தன் மனம்போல் உலக ஜனங்கள் நடக்காவிடில் அவர்களிடம் கோபம், தான் அடையவேண்டிய வஸ்துவை யாராவது தடைசெய்தால் அவர்களிடம் கோபம், இவைகள் ஸஹஜம். காம க்ரோதங்களே துக்கமாக பரிணமிக்கின்றன என்று பகவத் பாதாள் ஸூசிக்தி. काम: क्रोध: शोक इति पर्याया: இவைகளுக்கெல்லாம் ஒரே பொருள் என்கிருர்கள். मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयो: ஸுக துக்கங்களுக்கு மனமே காரணம். காம க்ரோதங்களை யடக்கினல் இஹத்திலும் பரத்திலும் ஸுகமுண்டு. அவைகளைவிருத்தி செய்தால்ஒரே துக்கம்தான்என்று பெரியோர் வசனம்.

Koviloor Digital Library

காம க்ரோதங்களை யடக்க பல பெரியோர்கள் பல கிரந்தங்களை எழுதியிருக்கிறார்கள் अक्रोधेन क्रोधं तर । என்று வேதமே கதறுகிறது. ஞான வாஸிஷ்டத்தில் பல உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆசார்யாளின் பிரகரண கிரந்தங்களில் ஒவ்வொன்றிலும் வைராக்யத்துக்கு உபாயத்தை உபதேசிக்கிறார்கள். இப்பொழுது சமீபத்தில் பிரம்ம வித்யா பத்ரிகையின் முதல் வெளியீட்டில் பிரசுரமாயிருக்கிற ஸ்ரீ பகவத் பாதாளின் பாஷ்யத்துடன் கூடிய ஞானாங்குசம் என்ற நூல் காமக்ரோதங்களை யடக்க சில விசேஷ உபாயங்களை உபதேசிக்கிறது. இதில் சொல்லிய பிரகாரமாக வேறு எவ்விடமும் சொல்லப்படவே இல்லை என்று நிச்சயமாகச் சொல்லாம். இதற்கு பகவத் பாதாள் உரை செய்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் தமது ஜீவன் முக்தி விவேகத்தில் ஞானாங்குசத்திலிருந்து பல சுலோகங்களை உதாஹரித்திருக்கிறார்கள் என்றால் இந்த நூல் பெரிய மஹான்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கும், ஸன்மார்கத்தில் செல்கிறவர்களுக்கு மிகவும் இன்றியமையாததென்பதற்கும் வேறு அத்தாட்சி தேவையில்லை. ஸம்ஸ்கிருத பாஷையின் பரிசயமில்லாதவர்களை உத்தேசித்து இதைத் தமிழ் உரையுடன் இந்த இதழில் பிரசுரம் செய்துள்ளோம். இந்த கிரந்தத்தை உலகில் பிரசுரம் செய்வதற்கு மூலகாரணம் பூஜ்ய பாதர்களான நமது ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள். தர்மமே உருவம் எடுத்ததுபோல் அவர்கள் விளங்குகிறார்கள். அதர்மம் ஓங்கி தர்மம் குறைவடைந்திருக்கும் இந்தக் காலத்திலும் ஸ்ரீ ஆசார்யாளின் தபோபலத்தால் பலபெரிய தர்மங்கள் நடைபெறுவதை தர்சிக்கவும் கேட்கவும் நாம் பாக்யம் செய்திருக்கிறோம்.

[தமிழுரை]

महात्मनां सत्त्ववशाद्व्यवस्थितिः
दृढा परिज्ञानसमाहितात्मनाम् ।
परापचारेषु तु मादृगात्मनः
समानयेत्कल्पनयानयाङ्कुशम् ॥ १

காமக்ரோதங்களான மதத்தினால் கொழுப்பேறியிருக்கும் மனம் என்ற யானை உலகிலுள்ள ஒரு மத யானைபோல் நல்வழி மீறி கெட்ட வழிகளில் செல்கின்றது. அதை அடக்க ஓர் அங்குசம் (ஈட்டி) வேண்டும். அது தான் (விவேக) ஞான ஈட்டி. ஆகால் மனதை வசப்படுத்தி அதை சாஸ்திர ஸம்மதமான மார்கத்தில் செல்விக்கவேணுமென்ற ஆசையுடன் ஞானமயமான அங்குசத்தை நிர்மாணம் செய்கிறார் கவி.

படித்த மேதாவிகளும் உதார புத்தியுள்ளவரும் சாஸ்திரங்களின் தத்வத்தை அறிந்தவருமான மஹான்கள் துர்ஜனங்களால் ஏற்படும் திட்டுதல், அடித்தல், அவமதித்தல் முதலிய விஷயங்களில் மனக் கலக்கத்தை யடைய மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் மனமே சுத்தமானது. ஆகையால் அவர்களுக்கு நாம் சொல்லப்போகும் உபதேசங்கள் தேவையில்லை. ஆனால் என்னைப் போலொத்தவர்கள் பின்வரும் பத்யங்களில் சொல்லியவாறு மனோகஜத்திற்கு அங்குசத்தைத் தேடிக்கொள்ளவேணும். காமக்ரோதாதிகளுக்கு விபரீதமாக பாவனை செய்யவேண்டும்.

यथा ममात्मप्रियसम्पदुद्यमः
तथा परेषामथ वा विशेषतः ।
अवाप्नुयुश्चेन्मदभिप्लवात् प्रियं
न ते चरेयुः कथमात्मनः प्रियम् ॥ २ ॥

எனக்கு பிரிய வஸ்துக்களைத் தேடிக்கொள்வதில் நான் மிகவும் பிரயத்தினம் செய்யவில்லையா? அதுபோல் பிறரும் தனக்கு பிரியமான வஸ்துக்களைத் தேடிக்

Koviloor Digital Library

கொள்வதில் ஈடுபடுவார்கள். சொல்லப் போனால் இன்னும் அதிகமாகவே ஈடுபடுவார்கள். அப்படி இருக்க என்னுடைய விநாசத்தால் அவர்கள் நன்மையடையும் பக்ஷத்தில் அவர்கள் தனக்கு நன்மையான அந்த காரியத்தை ஏன் செய்யமாட்டார்கள். ஆகையால் அவர்கள் என் விநாசத்தைக் கோருவது ஆச்சரியமில்லை.

नमेऽपराधः किमकारणे नृणां
मदभ्यसूयेत्यपि नैव चिन्तयेत् ।
न यत्कृता प्राग्भवबन्धनिस्सृतिः
ततोऽपराधः परमोनुचिन्त्यताम् ॥ ३ ॥

'நான் ஒருவருக்கும் ஹிம்ஸை செய்யவில்லை. தீங்கு செய்யவில்லை. அப்படி இருக்க ஒரு காரணமுமில்லாமல் மனிதர்களுக்கு ஏன் என்னிடம் அஸூயை ஏற்படவேண்டும். அவர்கள் ஏன் என்னுடைய குணங்களில் பொறாமை கொள்ளவேண்டும்-என்று எண்ணக்கூடாது. ஏனெனில் முன் பிறப்பில் நீ ஏன் ஜன்மத்தைப் போக்கிக் கொள்ளவில்லை? நீ முன் ஜன்மத்தில் வேதாந்த சிரவண மனன த்யானங்கள் செய்து ஆத்ம ஞானத்தையடைந்திருந்தால் இந்த ஜன்மமே ஏற்பட்டிராது. ஜன்மமில்லாவிடில் உன்னிடத்திலும், உன் குணங்களிலும் பொறாமையும் வந்திராது. ஆகையால் நீ செய்த பெரிய குற்றம் இதுவே—முன் ஜன்மத்தில் பிறப்பை விலக்கிக் கொள்ளவில்லை என்பது. ஆதலால் அவர்கள் உன்னிடம் அஸூயை கொள்கிறார்கள்.

अयं जनः कर्मवशाद्विलक्षणः
प्रसूति वेद्याभिनिवेशकर्मभिः ।
किमत्र चित्रं यदि युक्तमाचरेत्
प्रसूतिविद्याभिनिवेश कर्मणाम् ॥ ४ ॥

சத்ருக்களால் திட்டப்பட்டபோதும் அவமதிக்கப்பட்டபோதும் இவ்விதம் சிந்திக்க வேணும்:- லோகத்திலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் பிறப்பினாலும், ஞானத்தாலும் உத்ஸாகத்தாலும், விதி விலக்கு எனப்படும் ஸகல லௌகிக வைதிக கர்மங்களாலும் மாறுபாடுள்ளவனாகிறான். இந்த மாறுபாட்டுக்குக் காரணம் அவனவனுடைய ஜன்மாந்தரீய கர்மங்கள்தான். ஆகையால் ஒருவன் தன் கர்மானுஸாரமாயும் வசைதிட்டுகளைச் செய்தால் இதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? ஒரு ஆச்சரியமுமில்லை. இது ஸஹஜம் தான் என்று சிந்திக்கவேணும்.

ममापिचेद्द्रोहमुपैतिमानसं
परेषु मय्यप्रतिरूपवर्तिषु ।
अपारसंसारपरायणात्मनां
किमस्ति तेषां मम वा विशेषणम् ॥ ५ ॥

பிறர் நம்மை ஹிம்ஸித்தால் அவர்களுக்கு துக்கமுண்டாகட்டுமென்று நாம் சிந்திக்கலாகாது. ஏனெனில்: என் அபிப்பிராயத்துக்கு விரோதமாய் நடப்பவரிடம் எனக்கு துரோஹ புத்தி உண்டாகலாமா? நானோ மோக்ஷ மார்கத்தில் இறங்கியவன். எனக்கே இதரருக்கு துக்கமுண்டாக வேண்டுமென்று புத்திவந்தால் ஸாதாரண ஜனங்களுக்கும் எனக்கும் என்ன விசேஷம். அவர்களோ அக்கரையில்லாத ஸம்ஸார ஸமுத்ரத்தையே தாம் அடைக்கலமடைய வேண்டிய இடம் என்று நினைத்திருக்கின்றனர். நானோ ஸம்ஸாரத்தைக் கடந்து மோக்ஷத்துக்குப் போகிறவன். அவர்களுக்கும் எனக்கும் விசேஷம் வேண்டும் என்று சிந்திக்கவேணும்.

अहो नु कष्टं यदिमे तपस्विनो
रजस्तमोभ्यां विवशा विचेष्टिताः ।
हितेषु मूढा इति चेन्न मे कृपा
द्विषत्सु धिङ्मामयथार्थवेदिनम् ॥ ६ ॥

நமக்கு கெடுதி விளைவிக்கிறவர்களுக்கு நாம் துரோஹம் செய்யவும் கூடாது. நினைக்கவும் கூடாது என்று உரைத்தோம். அது மாத்திரமல்ல. அவர்களிடம் நாம்

கிருபையும் செய்யவேண்டும். ஏனெனில்:- ஐயோ, பாவம் இந்த தீனர்கள் ரஜோ குணத்துக்கும் தமோ குணத்துக்கும் வசமாகி விபரீத நடத்தையுடன் திரிகிறார்கள்—(வசை திட்டுகளை செய்கிறார்கள்.) அவர்கள் தனக்கு ஹிதம் யாதென்று அறியார்கள். அஹிதத்தை ஹிதமென்று நம்பியிருக்கிறார்கள். ஆகையால் அவர்களைப்பற்றி நான் இரக்கம்கொள்ளாவிடில் நானே விபரீத புத்தியுடையவனாவேன். நான் இருந்து என்ன உபயோகம்.

स्थिराः कृतज्ञाः मधुरा हितैषिणः
परात्मभूता यदि सर्वदेहिनः ।
समानचित्ताः स्युरजन्मने सतां
ध्रुवं भवेन्नातिमहानिशोद्यमः ॥ ௭ ॥

மற்றும் நமக்குக் கெடுதி விளைவிப்பவரை நாம் ஒருபோதும் நமக்கு சத்ருக்களாக பாவிக்கக்கூடாது. அவர்கள் நமக்கு மோக்ஷ மார்கத்தில் உபகாரம் செய்பவர்களாக்க் கருதவேண்டும். ஏனெனில்:-உலகில் ஸகல மனிதர்களும் ஸ்திர புத்தியுள்ளவர்களாயும், நன்றியறிபவர்களாயும், பிரியமான ஸ்வபாவமுள்ளவர்களாயும், பிறருக்கும் தனக்கும் ஹிதத்தைத் தேடுபவர்களாயும் பிறர் ஸுகதுக்கத்தை தன்னுடையதாக பாவித்து அஹிம்ஸகர்களாயும் ஸமபுத்தியுள்ளவர்களாயுமிருந்தால் ஸஜ்ஜனங்கள் ஒருவரும் மோக்ஷத்திற்கு அதாவது பிறப்பின்மைக்கு பிரயத்னம் செய்யமாட்டார்கள். இதரர் ஹிம்ஸைசெய்து நன்றிமறந்து சஞ்சல புத்தியாக இருந்து கெடுதி விளைவித்தாலல்லவா நமக்குப் பிறப்பில் வைராக்யம் வரும். வைராக்யம் வந்தால்தான் மோக்ஷ மார்க்கத்திற்கு வழிதேடுவோம். ஆகையால் அவர்கள் நமக்கு உபகாரிகளெனக் கருதுவோமாக.

अपारयन् बोधयितुं पृथग्जनान्
असत्प्रवृत्तेष्वपि नासदाचरेत् ।
अशक्नुवन् पीतविषं चिकित्सितुं
पिबेद्विषं कः स्वयमप्यबालिशः ॥ ௮ ॥

ஸஜ்ஜனங்களைப் பீடிக்கும் துஷ்டர்களை நல்ல உபதேசங்களால் கெட்ட மார்கத்தினின்று நல்வழிக்குத் திருப்பலாம். அது விசேஷம்தான். ஆனால் பல இடங்களில் உபதேசம் பயனற்றுப்போகிறது. துஷ்டர்கள் உபதேசத்தைக் கேட்டும் தன்னுடைய ஸ்வாபாவிக தோஷ பலத்தால் ஸஜ்ஜனங்களைப் பீடிக்கவே புறப்படுகிறார்கள். அப்பொழுது நாம் அவர்களை ஹிம்ஸை செய்து அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கலாகாது. உதாரணமாக ஒரு விஷ வைத்யன் விஷமருந்தியவனை சிகித்ஸை செய்யப்போகிறான். வைத்யம் பலிக்கவில்லை. விஷம் இறங்கவில்லை. அப்பொழுது அந்த வைத்யன் 'நான் செய்த வைத்யம் பலிக்கவில்லையே. நானும் விஷத்தைக் குடித்து மறிப்பேன்' என்று உருதிகொண்டு விஷத்தைக் குடிப்பதுபோலாகும் இது. அதாவது உபதேசத்தை கவனிக்காத துஷ்டர்களுக்கு நாம் தீங்கு செய்வது. ஆகையால் அவர்களை விட்டுவிடவேண்டும் என்பது கருத்து.

असज्जनानां चरितोपदेशनैः
उपैति संसारविरागनिश्चयम् ।
गुरुष्विवासादुपदेशतोऽर्थतः
कथं प्रतिद्वेषमियाद्द्विषत्स्वपि ॥ ௯ ॥

வினயமின்றி பெரியவர்களைத் திட்டும் ஸ்வபாவமுள்ளவர்கள் நமக்கு உபதேசகர்கள். அவர்களின் நடத்தைகளே நமக்கு உபதேசம். ஏனெனில் இந்த உபதேசங்களால் நமக்கு ஸம்ஸாரகத்தில் அதாவது வாழ்க்கையில் நிச்சயமான வைராக்ய மேற்படுகிறது. ஆகையால் ஞான வைராக்யத்தை உபதேசம் செய்கிற ஆசார்யர்கள் போல் அஸஜ்ஜனங்கள் நமக்கு உபகாரிகள் ஆகையால் நாம் அவர்களிடம் பிரதியாக துவேஷம் செய்யக்கூடாது. ஆசார்யர்களிடம் துவேஷம்செய்யலாமா? அதுபோலவே

Koviloor Digital Library

अहं न चेत्स्याम्मयि दुष्टभावनां
इमे व्रजेयुर्न निराश्रया जनाः ।
तदेनसा योजयिता परान् स्वयं
ममैव युक्तात्र ननु ह्यपत्रया ॥ १० ॥

மற்றொரு விதமாக யோஜித்தாலும் நமக்குத் தீங்கு செய்பவர்களிடம் நாம் த்வேஷங் கொள்ளலாகாது. எவ்விதமெனில் :- நான் இவ்வுலகில் தேஹத்துடன் பிறந்திராவிடில் இவர்கள் யாரிடம் த்வேஷ பாவனை செய்வார்கள். த்வேஷத்திற்கு ஒரு பாத்திரம் வேண்டுமன்றோ. நிராலம்பனமாக எப்படி த்வேஷம் செய்வது. ஆகையால் அவர்கள் செய்யும் கெட்டகாரியங்களுக்கு நானே மூலகாரணமாகிறேன். அவர்களை பாபத்தை நானே செய்விப்பவனாகிறேன் ஆகையால் இந்த விஷயத்தில் நான் லஜ்ஜைப்படுவதுதான் மேல். அப்படியிருக்க நான் எப்படி அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கமுடியும்.

तपः श्रुतिज्ञानसमाधिदूषणा
भवन्ति विघ्नाः किल सोयमुत्थितः ।
न मे सकामो भवतीति न त्यजेत्
शमे धृतिं दुर्जनदोषदूषितः ॥ ११ ॥

மோக்ஷ மார்க்கத்தில் யத்நம் செய்பவனுக்கு காமம் க்ரோதம் முதலியவைகள் இடையூறுகள். தபஸ் என்றால் சீதம்உஷ்ணம், ஸுகம், துக்கம் இவைகளை சகிப்பது. ச்ருதி என்பது வேதாந்தங்களை குருமுகமாகக் கேட்பது. ஞானம் இது ஆத்மா இவை அனாத்மா என்ற தீர்மானம். ஸமாதானம் அனாத்மாவைத்தள்ளி ஆத்மாவிடம் மனதை நிலைநிறுத்துவது. இவைகள் மோக்ஷத்திற்கு ஸாதனங்கள். கோபம் வந்தால் இவைகள் நிலைக்கா. ஒரு ஸமயம் துஷ்டர்கள் தீங்குசெய்தால் நமக்குக் கோபமுண்டாகும். அப்பொழுது தவம் முதலியவைகள் போய்விடும். ஆகையால் நாம் அந்த ஸமயம் எவ்விதம் பாவிக்க வேணுமெனில் :- "நான் இவர்கள்மீது கோபங்கொண்டால் என் தவத்திற்கு இடையூறு உண்டாகிறது. இந்த இடையூறு பயனற்றுப் போகட்டும். நான் சாந்தியில் திடமாயிருப்பேன்" இவ்விதம் சாந்தியில் தன்னை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளவேணும்.

न चेदयं मां दुरितैर्विकम्पये
दहं यतेयं प्रशमाय नाधिकम् ।
अतोऽतिलाभोयमिति प्रतर्कये
द्विचालरूढाहि भवन्ति निश्चलाः ॥

இந்த துர்ஜனன் என்னை வசை திட்டு அடி முதலானவைகளால் அசைத்துப் பார்க்காவிடில் நான் மோக்ஷத்திற்கு அதிகமாக பிரயத்னம் செய்யமாட்டேன். முன்போலவே சோம்பேரித்தனமாக இருந்துவிடுவேன். ஆதலால் மூர்க்கர்கள் எனக்குத் தீங்கு செய்வது எனக்கு ஒரு பெரிய லாபம். யாதெனில் தீங்குகளால் அதிக வைராக்யமேற்பட்டு மோக்ஷ மார்க்கத்தில் அதிக யத்னம் எடுத்துக்கொள்வேனல்லவா ? உலகில் ஒரு பந்தல் கால் புதைக்க வேணுமானாலும் அதைப்புதைத்து மறுபடியும் மறுபடியும் ஆட்டி அசைத்துப் பார்த்து ஸ்திரப்படுத்துகிறார்கள். அதுபோல் அவர்கள் என்னை மோக்ஷமார்கத்தில் அசையாப்பற்று இருக்கிறதா என்று பரீக்ஷை செய்கிறார்கள். அதில் நான் தவறலாமா ?

फलान्वितो धर्मयशोर्थनाशनः
स चेदपार्थः स्वशरीरतापनः ।
न चेह नामुत्र हिताय यः सतां
मनांसि रोषः स समाश्रयेत्कथम् ॥ १२

எப்படியாகிலும் கோபத்தைவிட வேண்டியது தான். ஏனெனில் கோபத்திற்கு பயன் ஏற்பட்டால் நமக்கு தர்மம், கீர்த்தி பணம் எல்லாம் போய்விடும். கோபத்தின் பயன் என்ன? பிறரைத் திட்டுவது, அடிப்

Koviloor Digital Library

பது, கொல்வது முதலியன. இவைகளை பிறரிடம் செய்தால் நம்முடைய புண்யம் அவனுக்குப் போகிறது. அவனுடைய பாபம் நம்மிடம் வருகிறது. மேலும் உத்தம குலத்தில் பிறந்த இந்த மனுஷ்யன் பாமரர் போல் இதரர்களைத் திட்டுகிறான் என்று ஜனங்கள் பேசிக்கொள்வார்கள். தூஷிப்பார்கள். அப்பொழுது நமது கீர்த்திக்கு நாசம் ஏற்படும். நாம் பிறருக்கு செய்யும் தீங்கால் பீடிக்கப்பட்ட பிறர்கள் ராஜாங்கத்தில் மனு செய்துகொள்ள நேரிடும். அப்பொழுது நாம் கோர்ட்டில் நம்முடைய கக்ஷியை ஸ்தாபிக்க வேணுமானால் பொருள் நஷ்டம். ஆக மூன்றுவித நஷ்டமேற்படுகிறது. நமது கோபத்திற்கு பயன் ஏற்படாவிடில் அதாவது நம் கோபத்திற்குப் பாத்திரமானவர் பலத்திலும் பொருளிலும் நம்மைவிட உயர்ந்தவராகில் நாம் அவரை ஒன்றும் செய்யமுடியாதவராகிறோம். அப்பொழுது அந்த கோபம் நம்முடைய சரீரத்தையே சுடுகிறது. கோபமென்பது ஒரு அக்நியன்றோ. ஆகலால் இஹலோகத்திலும் பரலோகத்திலும் நமக்கு ஹிதத்தைக் கொடுக்காது கோபம். கெடுதியையே விளைவிக்கும். அந்த கோபம் ஸஜ்ஜனங்களின் மனதில் உதிக்கலாமா?

अवश्यलभ्यं यदि यस्स्वकर्मजं
करोति दुःखं मम तद्विषज्जनः ।
तदूनतायामहितः समाहितो
लघूकरिष्यन् गुरुभारमाहितम् ॥ १४ ॥

ஒரு துஷ்டன் எனக்கு தீங்குகளை விளைவிக்கிறான். அவைகள் நான் முன்ஜன்மத்தில் செய்த பாபங்களின் பயனாகும். பாப புண்யங்கள் அவசியமாக பயனைக் கொடுத்தே தீரும். நாம் அனுபவிக்கும் ஸுகதுக்கங்களால் நமது புண்ய பாபங்கள் சிலவாகின்றன. அப்படியிருக்க அந்த துஷ்டன் மிகவும் சிரத்தையுடன் என்னை அவமானப்படுத்தி என்னிடமிருக்கும் பாப மூட்டைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைக்கிறான். நாம் அதிக பாரமான மூட்டைகளைத் தலையில் சுமந்து கொண்டிருக்கும்போது ஒருவன் கருணையுடன் நம்மிடமிருக்கும் சுமைகளை இறக்கிவிட்டால் நமக்கு எவ்வளவு சுகமாயிருக்கும். அதுபோல் நமது பாபமூட்டைகளைக் கரைக்கும் ஜனங்களிடம் நாம் அன்பு கொண்டாட வேண்டும்.

अतर्कयन्नभ्यवमन्यते परैः
स्वकर्मणः प्रागशुभस्य तत्फलम् ।
अथापि लिप्सोपगतोऽवमानभाग्
यदर्थमीहा न तदाप्नुयात् कथम् ॥ १५ ॥

நமக்கு அதர்கிதமாக அதாவது எதிர்பாராதபடி அவமானங்கள் நேரலாம். அப்படி பிறரால் அவமானம் நேர்ந்தால் ஜன்மாந்தரத்தில் நாம் செய்த பாபத்தின் பயன் இது என்று சிந்திக்கவேண்டும். ஒரு சமயம் நாமே பிறரிடம் வியவஹாரத்திற்குச் சென்று அப்பொழுது பிறரால் அவமானம் நேரிடலாம். அப்படி நேர்ந்தால் அது நாம் இப்பொழுது செய்த கர்மத்தின் பயன் என்று கொள்ளவேண்டும். நாம் பிறரிடம் வியாவஹாரத்திற்குப் போனபடியாலல்லவா இந்த அவமானம் நேர்ந்தது. ஆகையால் இந்த அவமானம் இந்த வியவஹாரத்தின் பயன் என்று தீர்மானிக்கவேண்டும். உலகில் மனிதன் எந்த சேஷ்டையை செய்கிறானோ அதன் பயனை அவசியம் அடைவானன்றோ? ஆகையால் பிறர் செய்யும் அவமானத்தைப் பொருட்படுத்தலாகாது.

ममापराधादपि नाम यद्ययं
सुखी भवेत्सोपि ममात्यनुग्रहः ।
भवार्णवे दुःखनिरन्तरार्दितः
तपस्व्ययं विश्रममाप्नुयादिति ॥ १६ ॥

Koviloor Digital Library

ஒருவன் நம்மைப் பீடித்தால் இவ்விதம் சிந்திக்கவேணும்:- எனக்குத் தீங்கு செய்தாவது இவன் ஸுகப்பட்டால் அது எனக்கு அவன் செய்த பெரிய அருள். ஏனெனில் இந்த ஸம்ஸார ஸமுத்ரத்தில் மிதந்துகொண்டு துக்கத்தால் எப்போதும் பீடிக்கப்பட்டு வரும் ஒரு தீனன் ஒரு க்ஷணமாவது களைப்பாறுவானன்றோ. அவன் களைப்பாறுவதற்கு நான் காரணமாயிருப்பது என்னுடைய பாக்யம். ஆகையால் நாம் தீங்குகளைப் பொருத்துக் கொள்வோமாகில் தீங்கு விளைவிப்பவருக்கு நாம் பெரும் உதவி செய்ததாகும்.

यतो मुमुक्षोः बहुदुःखभाजनो
य एष देहो मदरिर्भवानुगः ।
तमेव योद्वेष्टि स एव मे सुहृत
तदात्मदृक् स्यामहमात्मनोऽसुहृत ॥ १७ ॥

மற்றொரு விதமாக ஆலோசித்தாலும் நமது தேஹத்தை த்வேஷிக்கிறவர்களுக்கு நாம் துரோகம் செய்யக்கூடாது:— நான் ஸம்ஸார துக்கத்திலிருந்து மோக்ஷமடைய யத்தனிக்கிறேன். ஸம்ஸார துக்கமனைத்தும் தேகத் தால் ஏற்படுகிறது. ஆதலால் இந்த தேகத்திலிருந்து விடுபட்டு மறுபடியும் தேகம் எடுக்காமலிருந்தால் தான் எனக்கு துக்கம் நீங்கும். ஆகையால் இந்த தேகம் அனாதியாக என்னுடன் கூட வந்து கொண்டிருக்கும் சத்ரு. அந்த சத்ருவான தேகத்தை ஒருவன் த்வேஷித்தால் அவன் எனக்கு உபகாரியே ஒழிய அபகாரியல்ல. ஆகையால் அவனை நான் சிநேகிதனாக பாவிக்கவேணும். அந்த தேகத்தையே நானென்று நினைத்தால் நானே எனக்கு அபகாரியாவேன். உபகாரியல்ல.

இந்த விஷயம் வேறு இடத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

आत्मानं यदि निन्दन्ति निन्दन्त्यात्मानमेव ते ।
शरीरं यदि निन्दन्ति सहायास्ते जना मम ॥

'தங்களை ஒருவன் நிந்திக்கிறான்' என்று ஒரு சிஷ்யன் தன் குருவினிடம் கூறுகிறான். குரு சொல்கிறார். தங்களை என்றாயே அதற்கு என்ன பொருள்? ஆத்மா என்பாயானால் அவன் தன்னையே நிந்தித்துக் கொள்கிறான் என்று அறிவாயாக. ஏனெனில் அவனுடைய ஆத்மாவைக்காட்டிலும் என் ஆத்மாவேறில்லை. ஆதலால் என் ஆத்மாவை நிந்தித்தால் அவன் தன் ஆத்மாவையே நிந்திக்கிறான். அவன் என் சரீரத்தை நிந்திக்கிறான் என்பாயாகில் நீ துக்கப்படாதே. அவன் எனக்கு ஸஹாயம் தான் செய்கிறான். ஏனெனில் என் சரீரம் எனக்கு துக்கத்தைக் கொடுக்கும் சத்ரு. அதை நானே நிந்தித்துக்கொண்டிருக்கிறேன். அவனும் எனக்கு உதவியாக இருந்து அதை நிந்தித்தால் அவன் எனக்கு உதவி செய்தவனாகிறான். அது நல்லதுதானே என்றார்.

अनावृताङ्गः पतितो महोदधौ
न कामयेताम्बुभिरप्लवं यथा ।
भवार्णवे मातदवांतिजा हजो
ममैव भूयन्निति तद्वदक्रमः ॥ १८

மேலும் இந்த ஸம்ஸாரத்திலிருந்து கொண்டே பிறர்களுடைய வசை திட்டுகளுக்கு நான் ஆளாவேனா என்று பொறுமைகொள்வது சரியல்ல. ஏனெனில் ஒருவன் தேஹத்தை மூடிக்கொள்ளாமல் ஸமுத்திரத்தில் விழுகிறான். 'அவன் தன் தேஹம் ஜலத்தில் படக்கூடாதென்று ஆசைப்படலாமா? அப்படி ஆசைப்பட்டாலும் நிறைவேற்ற முடியுமா? அதுபோல் ஸம்ஸாரஸாகரத்தில் விழுந்து முழுகிமுழுகி எழுந்திருக்க முடியாத நமக்கு பிறப்பினாலும் பிறர்செய்யும் அவமானத்தாலும் துக்கம்வராமலிருக்க வேண்டுமென்று பிரார்த்திப்பது சரியல்ல. அவை வரவேவருவன. ஸஹித்துக்கொள்வதுதான் உத்தமம்.

Koviloor Digital Library

निराकरिष्णुर्यदि नोपलभ्यते
भविष्यति क्षान्तिरनाश्रया कथम् ।
यदाश्रयात् क्षान्तिफलं ममाप्यते
स सत्कृतिं कामिव नाम नार्हति ॥ १९

ஆலோசித்தால் நம்மை அவமானம் செய்பவன் நம்மால் பூஜிக்கத்தகுந்தவனாவான். ஏனெனில்:- நம்மை அவமானமாகப் பேசுபவன் இல்லாவிடில் நமக்கு பொருமை எப்படிவரும் ஒரு ஆதாரமுமில்லாமல் பொருமைக்கு இடமில்லையன்றோ ? ஆகையால் எவனை ஆச்ரயித்துக்கொண்டு நமக்குபொருமையும் அதன் பயனாக மனத்தெளிவும் ஏற்படுகிறதோ அவனை நாம் எவ்விதமாகத் தான் பூஜிக்கக்கூடாது. ஸர்வவிதமாகவும் அவனை ஆராதிக்கலாமென்று பொருள்.

सुहृन्मतेनापकृते कृतं मया
ध्रुवं पुरा कर्म सुहृद्विरञ्जनम् ।
तथास्य सिद्धि [illegible]
चरेदिति द्विषद्विप्रकृतो न तप्यते ॥ २०

நமக்குத் தீங்குவிளைவிக்கிறவன் நேரான சத்துருவாயுமிருக்கலாம், அல்லது ஸிநேகிதன் போல் வேஷங்கொண்டு மறைந்திருந்து தீங்கு செய்பவனாயுமிருக்கலாம். அவர்களுக்குள் நேரான சத்ரு விஷயத்தில் ஞானாங்குசத்தை இதுவரையில் உரைத்தோம். ஸிநேகிதமாயிருந்து தீங்கு செய்பவர்களைப்பற்றி பின்வருமாறு சிந்திக்க வேணும்:— "ஸிநேகிதன் என்று நான் இதுவரையில் எண்ணியிருந்தவன் அபகாரம் செய்திருக்கிறான். ஆகையால் நிச்சயமாக பூர்வ ஜன்மத்தில் நான் ஸிநேகிதர்களுக்கு துக்கமுண்டாகும்படியான வேலைகள் செய்திருப்பேன். அந்த கார்யங்கள் இப்பொழுது பலனைக் கொடுக்கின்றன." இவ்விதம் சிந்தித்தால் மனதில் தாபமடைய மாட்டான்.

कश्चित्पुमान् क्षिपति मां प्रति रूक्षवाक्यैः
श्रीमत्क्षमाभरणमेत्य मुदं व्रजामि ।
शोकं व्रजामि पुनरेवमयं तपस्वी ।
चारित्रतः स्खलितवानितिमन्निमित्तम् ।

ஒரு மனிதன் என்னைக் கடோர வார்த்தைகளால் தாக்கி எறிந்து பேசுகிறான். அப்பொழுது பொருமை என்ற கவசம் போன்ற ஆபரணத்தை அணிந்து சந்தோஷமடைகிறேன். ஆனால் மறுபடியும் துக்கம் வருகிறது. ஐயோ பாவம்! இந்த தீனன் என் காரணத்தால் தன் நடத்தையிலிருந்து நழுவி இஹத்தில் அபகீர்த்திக்கும்; பரலோகத்தில் நரகத்திற்கும் பாத்திரனாகிறானே: அவனுக்கு நான் எவ்விதம் உபகாரம் செய்வேன்.

स्वधर्मपीडामनिचिन्त्य योयं
मत्पापशुध्यर्थमिह प्रवृत्तः ।
न चेत्क्षमामप्यहमस्य कुर्यां
मत्तः कृतघ्नो वद कीदृशोन्यः ॥ २२

மேலும் நம்மை ஒருவன் நிந்தை செய்ய அதை நாம் பொருத்துக்கொண்டால் நம்முடையபாபங்கள் அவனிடம் செல்கின்றன என்று சொன்னோம். இந்தரீதியாக நம்மை நிந்திக்கும் இந்த மனிதன் தன் தர்மமும் குறைந்து பிறர்பாபமும் தனக்கு வருமே என்பதையும் பொருட்டுப்படுத்தாமல் என்னை அவமதித்து என் பாபத்தைப் போக்கவேண்டுமென்று பிரயத்னம் செய்திருக்கிறான். அவனுக்கு நான் என்ன உபகாரம்செய்வேன். பொருத்துக்கொள்ளவாவது வேண்டும். அவனுக்குப் பொருமைகூட நான் காட்டாவிடில் என்னைவிட நன்றிமறப்பவன் உலகில் யார் இருக்கிறான் சொல்லுங்கள்.

सततसुलभदैन्ये निस्सुखे जीवलोके
यदिमम परिवादात् प्रीतिमाप्नोति कश्चित् ।
परिवदतु यथेष्टं मत्समक्षं तिरोवा
जगति हि बहुदुःखे दुर्लभः प्रीतियोगः ॥

Koviloor Digital Library

6006
R65(அக்)

உலகில் தைன்யம் அதாவது நான் என்ன செய்வேன் துக்கப்படுகிறேனே என்னை யார் உயர்தூக்கிவிடுவார்கள் என்ற மனோ பாவம் மலிந்துகிடக்கிறது. ஆதலால் உலகில் சுகமில்லை. இவ்விதமிருக்கும் உலகில் என்னை துர்வாக்யங்களால் நிந்தித்து ஒருவன் பிரீதியடைந்தால் எனக்கு திருப்தி. அவன் என்னை வேண்டியவரையில் நிந்திக்கட்டும். எதிரிலும் சரி, மறைந்திருந்தும் சரி நிந்திக்கட்டும். துக்கம் மிதம்மின்சியிருக்கும் உலகில் சந்தோஷமென்பது அரிதன்றோ? இவ்விதமாவது அவன் சுகத்தையடையட்டுமே.

मन्निन्दया यदिजनः परितोषमेति
नन्वप्रयत्नजनितोयमनुग्रहो मे ।
श्रेयोऽर्थिनो हि पुरुषाः परतुष्टिहेतोः
दुःखार्जितान्यपि धनानि परित्यजन्ति॥ २४

என்னை நிந்தித்து ஒ[illegible]வன் சந்தோஷமடைந்தால் இது அவன் எனக்கு செய்[illegible] பெரிய உபகாரம். நான் பிரயத்தனம் செய்யாமல் எனக்குக்கிடைத்த அனுக்ரஹம்.

ஏனெனில் உலகில் சிரேயஸ்ஸை நாடுகிறவர்கள் பிறர் சந்தோஷிக்கும் பொருட்டு தான் சிரமப்பட்டு சம்பாதித்திருக்கும் பொருள்களையும் தர்மஞ்செய்கிறார்கள். அப்படி ஒரு சிலவுமில்லாமல் எனக்கு கிடைத்திருக்கிற உபகாரம் இது. இவ்விதம் பாவனை செய்து பொருமையை அடையவேண்டும் என்று கவி உபதேசிக்கிறார்.

இவ்விதம் காமக்ரோதங்களை அடக்க பல உபாயங்களை உரைத்தார் கவி. தாத்பர்யமென்ன? பொருமைக்குக் காரணம் தத்வத்தை அறியாமை தான் என்று ஏற்படுகிறது. ஆகையால் நாம்விவேகத்தால் காமக்ரோதாதிகளை அடக்கி சாந்தியையடைந்து இஹலோக ஸௌக்யத்தையும், மோக்ஷத்தையும் பெறுவோமாக.

सर्वतः परिधानन्तं मनो मत्तगजेन्द्रवत् ।
[ज्ञानाङ्कुशवशं] कृत्वा पुनः पन्थानमानयेत्॥२५

கொ[illegible]ப்பேறிய யானைபோல் நாலாபக்[illegible]களிலும் விஷயங்களில் ஓடும் மனதை ஞானாங்குசத்தால் வசப்படுத்தி மறுபடியும் நல்ல மார்க்கத்துக்குக் கொண்டுவருக.

ஸ்ரீ சங்கரபகவத்பாதாளாலியற்றப்பட்ட
பாஷ்ய மொழிபெயர்ப்புடன் கூடிய
ஞானாங்குசம் முற்றிற்று.

10-1